# வைகை வெள்ளம்

மதுரை வைகையில் வெள்ளம் ஆர்பரித்து இருகரைகளையும் தொட்டு இப்போது ஆற்றில் ஒடிக்கொண்டிருக்கிறது இது பல ஆயிரம் ஆண்டுகளாக வருடந்தோறும் நடைபெறும் நிகழ்வு.

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பாடிய பரிபாடலில் வையை ஆறு பற்றியும், வெள்ள பெருக்கு பற்றிய பாடல்கள் உள்ளன. வைகையில் ஆற்று வெள்ளம் கரைகடந்து பேரொலியுடன் ஊருக்குள் புகுந்து, சேரியில் புகுந்து பாய்ந்தோடி வருகிறது. மேலும் மேலும் பெருகி கரைக்கு அடங்காது பெருகி பரவும். இரண்டு கரைகளில் வளர்ந்துள்ள பலவகை மரங்களின் மலர்கள் உதிர்வதால் ஆற்று நீர் மலர் போர்வை போர்த்தியது போல் மலர்களால் நிறைந்து பொங்கி பெருகி வருகிறது. வெள்ள பெருக்கை காண மக்கள் குதிரை மீதும் யானை மீதும் தேரிலும் ஏறி சாரை சாரையாக வந்து வையை வெள்ளப் பெருக்கை கண்டும் நீராடியும் மகிழ்கிறார்கள். ஆண்களும் பெண்களும் வாச மலர்களால் தொடுக்கபட்ட மாலைகள் அணிந்திருக்க பூக்களில் தேனெடுக்க வண்டுகள் மொய்த்து ரீங்காரமிடுகின்றன. மார்பில் பூசிய சந்தனம் போன்ற வாசனை பொருட்களின் மணம் சோலை எங்கும் நிறைந்திருந்தது. பாணர்கள் இழுத்து கட்டிய நரம்புகளை மீட்டி மருதபண்ணை பாட ஆரவார முழக்கமிட்டு ஆடிப் பாடி மகிழ்ந்தனர். நீர் விளையாட்டிற்குரிய அணிகளை விற்கும் அங்காடிகளில் வாங்கி அணிந்து கொண்டு புதுபுனலில் நீராடி மகிழ்கிறார்கள். மதுரை மக்களோடு தென்னவன் பாண்டியனும் உறவுகளோடு நீராடி மகிழ்கிறான்.

தமிழ் இலக்கணம் தொகுத்து விரிவாக சொல்லியுள்ள தொல்காப்பியத்தில் பரிபாடல் பற்றி சொல்லப்பட்டுள்ளது. தொல்காப்பியம் இடைச்சங்க காலத்தை சேர்ந்தது என்று கணிக்கின்றார்கள். தொல்காப்பியத்திற்கு முற்பட்ட பரிபாடல் எக்காலத்தை சேர்ந்ததாக இருக்கும் என்று கணித்துக் கொள்ளுங்கள்.

மதுரை வைககை ஆற்று புதுபுனலில் நீராடி மகிழ ஆண்களும் பெண்களும் ஆற்றங்கரையில் உள்ள பல நீராடும் துறைகளில் ஒன்றான திருமருதந்துறை நோக்கி வருகின்றனர்.

சில பாடல்களில் கூறப்பட்டவற்றை பார்க்கலாம்

பொறிவி ஆற்றுறி துவர்ப்புகை சாந்த
எறிவன எக்குவ ஈர் அணிக்குஏற்ற
நறவணி பூந்துகில் நன்பல ஏந்திப்
பிறதொழின … ம் பின்பின் தொடரச்
செறிவினைப் பொலிந்த செம்பூங்கண்ணியர்
ஈரணி வெட்சி இதழ்புனை கோதையர்
தார்முடியினர் தகைகெழு மார்பினர்
மாவும் களிறும் மணிமணி வேசரி
காவு நெரியக் கரைநெரிபு ஈண்டி

வையை 22ம் பாடல் 17-25 வரிகள்

வைகையில் நீராட பெண்கள் பூசிக்கொண்டு நீராட வாசனைப் பொருட்கள், அகில் முதலிய புகையூட்ட கூடிய பொருட்கள், பூசிக்கொள்ள சந்தனம் மற்றும் நீரை மூங்கில் குழாய்களில் நிரப்பி பிறர் மேல் பீய்ச்சி அடித்து விளையாட கருவி என பல பொருட்கள் எடுத்து கொண்டு சிவந்த பூக்களை மாலையாக அணிந்த பெண்களும், குளிர்ந்த வெட்சிப் பூச்சூடிய மகளிரும் மாலை அணிந்த ஆண்களும்,அகன்ற மார்பினை உடைய ஆடவர்களும் என இவர்கள் மணிகள் பூட்டி அலங்கரிக்கபட்ட குதிரைகளிலும், யானைமீதும் ஏறி ஆற்றங்கரைவந்து சோலைகளில் தங்கியதும் இவர்களின் கூட்ட நெரிசலில் ஆற்றுப்படுகையே நெரியலாயிற்று.

வேலாற்று மொய்ம்பனின் விரைமலர் அம்பினோன்
போலாற்று முன்பின் புனைகழல் மைந்தரோடு
தார் அணி மைந்தர் தவப்பயன சான்ம் எனக்
கார் அணி கூந்தல் கயல்கண் கவிர் இதழ்
வார் அணி கொம்மை வகை அணி மேகலை
ஏர் அணி இலங்கு எயிற்று இன்நகையவர்
சீர் அணி வையைக்கு அணிகொல்லோ வையைதன்
நீர் அணி நீத்தம் இவர்க்கு அணிகொல் எனத்
தேருநர் தேருங்கால் தேர்தற்கு அரிதுகாண்
தீரமும் வையையும் சேர்கின்ற கண்கவின்

வையை 22ம் பாடல் 26-35 வரிகள்

வேல் எடுத்து விளையாடும் வலிமையுடைய போர்புரியும் வெற்றிக்கழல் அணிந்த இளைஞரும், வாசமலர் பூக்களை மாலையாக அணிந்த ஆடவரும், கார்மேகம் போன்ற கருங்கூந்தலும், மீன் போன்ற கண்களும் சிவந்த மலர் போன்ற உதடுகளும் மேகலை அணிந்த மகளிரும், வரிசையாக அமைந்த பல்வரிசையும் இளநகையும் உடைய பெண்களும் வைகை ஆற்று படுகையில் வந்து கூடியிருப்பதை பார்த்தவர்கள் இவர்கள் இந்த வையை ஆற்றுக்கு அழகு செய்கிறார்களா இல்லை வையை ஆறுதான் இவர்களால் அழகு பெற்றதா என்று ஆராய புகுந்தால் எவரால் எது அழகு பெற்றது என்று தீர்மானிப்பது எளிய செயல் இல்லை என்பதுபோல் காண்பவர் கண்களுக்கு இனிய விருந்தாகும் வையை ஆற்றின் கண்கவர் அழகு.

வெருவர கொல்யானை வீங்கு தோள்மாறன்
உருகெழு கூடல் அவரொடு வையை
வருபுனல் ஆடிய தன்மை பொருவுங்கால்
இரு முந்நீர் வையம் பிடித்தென்னை யான் ஊர்க்கு
ஒரு நிலையும் ஆற்ற இயையா வருமாவின்
அந்தர வான் யாற்ற ஆயிரம் கண்ணினான்
இந்திரன் ஆடும் தகைத்து

பகைவர் கண்டஞ்சும் யானைப்படையும் வெற்றிப் புகழ் உயர்ந்த தோள்களும் உடைய பாண்டிய மன்னன் அழகு மிகுந்த மதுரைக் கூடல் மக்களோடு வையை ஆற்றில் வந்து புது வெள்ளத்தில் நீராடியதை கூற வேண்டும் என்றால் கடல் சூழ்ந்த இந்த உலகமெல்லாம் தேடினாலும் கிடைக்காததாகும். ஆனாலும் சொல்வதானால் ஆயிரம் கண்ணுடைய தேவேந்திரன் ஆகாய கங்கையில் நீராடியதைக் கூறலாம்